S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்புத் திட்டம் செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 358 | 20.06.2026 | SATURDAY | AANI : 6 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 358 | 20.06.2026 | சனிக்கிழமை | ஆனி : 6 | விலை : ரூ.5/-

## மேகதாது அணைக்கு எதிராக முதல்அமைச்சர் விஜய் கொண்டு வந்த

# "தனித்தீர்மானம் நிறைவேற்றம்"

சென்னை, ஜூன்.20-

தமிழக சட்டசபையில் நேற்று முதல்அமைச்சர் ஜோசப் விஜய், மேகதாது அணை விவகாரம் தொடர்பாக அரசினர் தனித் தீர்மானம் ஒன்றை கொண்டுவந்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

மேகதாது அணை

காவிரி நடுவர் மன்றம் 52 2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், சுப்ரீம் கோர்ட்டு 16.2 .2018 அன்று அளித்த தீர்ப்பையும் மதிக்காமலும், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவைப் பெறாமலும், மத்திய அரசின் எந்தவித அனுமதியைப் பெறாமலும், கர்நாடக அரசு தன்னிச்சையாக காவிரி நதியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட முயற்சி மேற்கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால், கர்நாடக அரசின் இச்செயலுக்கு தனது கடும் எதிர்ப்பை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

கர்நாடக அரசின் மேகதாது அணைத் திட்டத்திற்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உள்பட எவ்வித அனுமதியும் அளிக்கக்கூடாது என மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

காவிரி நடுவர் மன்றமும், சுப்ரீம் கோர்ட்டும், காவிரிப்படுகை ஒரு பற்றாக்குறை படுகை எனக் குறிப்பிட்டு, படுகையின் மொத்த நீரினையும், படுகை மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்துவிட்டால், காவிரிப்படுகையில் புதிய திட்டங்களை மேற்கொள்ளவோ, கூடுதலாக நீரை பயன்படுத்தவோ இயலாது.

அனுமதி வழங்க கூடாது

காவிரிப் பிரச்சினை தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களின் உணர்வுப்பூர்வமான பிரச்சினையாகும். ஆதலால், கர்நாடக அரசு மேகதாதுவிலோ அல்லது காவிரிப்படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எவ்வித புதிய நீர்த்தேக்க திட்டத்தை, பிற படுகை மாநிலங்களின் இசைவு இன்றியும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும் மேற்கொள்ளக்கூடாது என கர்நாடக அரசினை அறிவுறுத்துமாறு மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.



கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளவோ அல்லது அதற்கு அனுமதி வழங்கவோ கூடாது என்று மத்திய நீர்வள குழுமத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.

விவசாயிகள் நலன்

கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகள் நலனைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இப்பேரவை தனது ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

எதிர்க்கட்சிகள் வரவேற்பு

அதனைத்தொடர்ந்து, முதல் அமைச்சர் ஜோசப் விஜய் முன்மொழிந்த தனித்தீர்மானத்தை ஆதரித்து எதிர்க்கட்சி தலைவர்கள் பேசினார்கள். நிறைவாக, மேகதாது அணைக்கு எதிரான முதல்அமைச்சர் விஜய் கொண்டு வந்த தனித்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## தனியார் கல்வி நிறுவனங்களில் சாதி விவரம் கேட்க தடை கோரி வழக்கு: அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு



மதுரை: ஜூன்.20-


தனியார் கல்வி நிறுவன விண்ணப்ப படிவங்களில் சாதி, சமூக விவரங்கள் கேட்க தடை கோரிய வழக்கில் தமிழக பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித்துறை முதன்மைச் செயலர்கள் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த விக்ரமன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடம் சாதி கேட்ககூடாது என உள்ளது. இதை மீறி கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையின் போது விண்ணப்பதாரர்களின் சாதி மற்றும் சமூக விவரங்களை கட்டாயமாகக் கேட்பது மாணவர்கள் தேர்வு மற்றும் சேர்க்கை செயல்முறைகளில் பாகுபாடு ஏற்பட வழிவகை செய்யும்.

எனவே தமிழகத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களும் விண்ணப்பப் படிவங்களில் சாதி அல்லது சமூக விவரங்களை கட்டாயமாக சேகரிக்க தடை விதிப்பதோடு, தனியார் நிறுவனங்களில் பாகுபாடு இல்லாத சூழலை உறுதி செய்ய உரிய ஒழுங்கு முறைகளை வகுக்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சதீஷ்குமார் ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதிபதிகள், கல்வி நிறுவனங்களில் விண்ணப்பங்களில் சாதிய விவரங்களை கேட்பதை கட்டாயமாக்கக்கூடாது என்பது தொடர்பாக கல்வி நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதா? எனக் கேட்டு, மனு தொடர்பாக தமிழ்நாடு பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித்துறை முதன்மைச் செயலர்கள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

## "நீர் மேலாண்மை பற்றி யோசியுங்கள்" மேகேதாட்டு தீர்மானத்தில் பிரேமலதா பேச்சு



சென்னை: ஜூன்.20-

"தமிழ்நாட்டுக்கு முக்கியமான இந்த தீர்மானத்தை யாரும் எதிர்க்கப் போவதில்லை. தேமுதிகவும் ஆதரிக்கிறது. கூடவே, மின்மிகை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கியதை போல், நீர் மேலாண்மையை நாம் உருவாக்க வேண்டும். இனிவரும் மழைக்காலத்துக்கு முன்னதாக நீர் மேலாண்மையை யோசிக்க வேண்டும்." என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையின் இரண்டாம் நாள் கூட்டத் தொடர் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது. முதலில் மறைந்த மூத்த தலைவர்கள், திரைப் பிரபலங்கள், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தமிழக முதல்வர் விஜய் மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகா நடவடிக்கையை எதிர்த்து தீர்மானத்தை முன்மொழிந்தார்.

அதன் மீது பல்வேறு கட்சித் தலைவர்களும் தங்களின் கருத்துகளை முன்வைத்தினர். தொடர்ந்து தமிழக அரசின் தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்வைத்த கோரிக்கையும் ஏற்கப்படுவதாக முதல்வர் விஜய் தனது பதிலுரையில் தெரிவித்தார்.

முன்னதாக தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பேசுகையில், "தமிழ்நாட்டுக்கு முக்கியமான இந்த தீர்மானத்தை யாரும் எதிர்க்க போவதில்லை. அனைவரும் ஒன்றாகத்தான் இருப்போம். தேமுதிக இந்த தீர்மானத்தை ஆதரிக்கிறது.

ஆனால், சுதந்திரம் வாங்கிய காலத்தில் இருந்து மீனவர்கள் பிரச்சினை, காவிரி நதி நீர்ப் பிரச்சினைகள் குறித்து தொடர்ந்து பேசிக் கொண்டுதான் இருக்கிறோம்.

தமிழ்நாடு மக்களின் உரிமையை நாம் ஒவ்வொரு முறையும் சுற்றியுள்ள மாநிலங்களை கேட்டுக்கொண்டேதான் இருக்கிறோம். தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழ்நாடு மாற வேண்டும்.

முதல்வராக இருந்த ஜெயலலிதா, கருணாநிதி, மு.க. ஸ்டாலின் என அனைவரும் காவிரி நதி நீர் விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட பல போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

தாய்ப்பால் போல் தண்ணீர் முக்கியமானது. நீரின்றி அமையாது உலகு. எனவே, மின்மிகை மாநிலமாக தமிழகத்தை உருவாக்கியதை போல், நீர் மேலாண்மையை நாம் உருவாக்க வேண்டும். இனிவரும் மழைக்காலத்துக்கு முன்னதாக நீர் மேலாண்மையைப் பற்றி யோசிக்க வேண்டும்.

தமிழகத்தில் எங்கெல்லாம் நதிகளை இணைக்க முடியுமோ, அதைச் செய்ய வேண்டும். அனைத்துப் பகுதிகளையும் தூர்வார வேண்டும். மழை நீர் வீணாக கடலில் கலப்பதை தடுக்க வேண்டும்." எனத் தெரிவித்தார்.

## "மேகேதாட்டு அணையை தடுக்கும் தமிழக அரசின் முயற்சிகளுக்கு திமுக துணை நிற்கும்" : உதயநிதி உறுதி

சென்னை: ஜூன்.20-

"மேகேதாட்டுவில் அணை கட்டப்படக் கூடாது என்பதே திமுகவின் உறுதியான நிலைப்பாடு. காவிரி விவகாரத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தியுள்ளார். மேகேதாட்டு அணைக்கு எதிராக முதல்வர் கொண்டுவந்த தீர்மானத்துக்கு திமுக ஆதரவு அளிக்கிறது," என தமிழக எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரின் 2வது நாளான இன்று மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகா நடவடிக்கையை எதிர்த்து முதல்வர் விஜய் தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார். இது குறித்து உதயநிதி ஸ்டாலின் சட்டப்பேரவையில் கூறும்போது, "மேகேதாட்டுவில் அணை கட்டப்படக்கூடாது என்பதுதான் திமுகவின் உறுதியான நிலைப்பாடு.

காவிரி விவகாரத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தியுள்ளார். இதை இந்த அவையில் இருக்கக்கூடிய மூத்த உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஒரு நீண்ட நெடிய சட்ட, அரசியல் போராட்டங்களை நடத்தி தான் நாம் காவிரி மீதான உரிமையை பெற்றெடுத்தோம். ஆனால் அதைப் பறிக்கும் வகையில் கர்நாடக அரசு, மேகேதாட்டுவில் அணை கட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.



எங்களுடைய கூட்டணியில் இருந்த கட்சி, கர்நாடகவில் ஆட்சியில் இருந்தாலும் மேகேதாட்டு அணை கட்டும் திட்டத்துக்கு, முன்னாள் முதல்வர் ஸ்டாலின் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். அணை திட்டத்திற்காக ரூ.1000 கோடி கர்நாடக அரசு ஒதுக்கியதைக் கண்டித்து, இதே அவையில் தீர்மானம் நிறைவேற்றியது திமுக அரசு.

2021ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிக்கு வந்த அடுத்த மாதமே, மேகேதாட்டு அணை கட்ட அனுமதிக்கக் கூடாது என பிரதமருக்கு முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதினார். பிறகு அதே கருத்தை வலியுறுத்தி, அதற்கு அடுத்த மாதமே ஜல்சக்தி துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதினார்.

அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களைக் கூட்டி, மேகேதாட்டு அணையை கட்ட அனுமதிக்கக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றினோம். அத்தீர்மானத்தை ஒன்றிய அமைச்சரிடம் நேரில் சென்றும் வலியுறுத்தியிருக்கிறோம்.

2022-2023 நிதியாண்டில் மேகேதாட்டு அணைக்கு கர்நாடக அரசு ஒதுக்கிய நிதியைக் கண்டித்து, சட்டப்பேரவையில் அரசினர் தனித்தீர்மானம் நிறைவேற்றினோம். தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்' என்று முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின். செயல்பட்டார்.

இப்படி, திமுக தமிழ்நாட்டின் தொடர் எதிர்ப்பை பதிவு செய்ததன் காரணமாகதான் இதுவரை மேகேதாட்டு அணை கட்டப்படவில்லை. மேகேதாட்டு அணை கட்டும் கர்நாடகாவின் முயற்சிக்கு எதிராக முதல்வர் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை திமுக சார்பில் மனதார வரவேற்கிறோம்.

கர்நாடகா, மேகேதாட்டு அணை கட்டுவதை தடுக்க சட்டரீதியாகவும், பிரதமர் மூலமாகவும் இந்த அரசு எடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் திமுக நிச்சயம் துணை நிற்கும்.

மேகேதாட்டு அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசை நாம் அனைவரும் சேர்ந்து ஒற்றுமையாக இருந்து தடுத்து நிறுத்துவோம். இந்த ஆண்டு ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணை திறக்காததால், டெல்டா விவசாயிகள் சிரமத்தில் இருக்கிறார்கள். குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்த காவிரி ஆணைய கூட்டத்தில் தமிழ்நாடு அரசு உறுதியாகப் பேசி, நமக்கான நீர் பங்கீட்டை பெற வேண்டும்.

இந்தத் தீர்மானத்தை கடிதம் மூலமாக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைப்பதற்கு பதிலாக, தமிழகத்தின் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து ஒரு குழுவாக சென்று ஒன்றிய அரசிடம் இதை கொடுத்து நமது ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதற்கு திமுக தயாராக இருக்கிறது; அரசியல் வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்த அரசும் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மாணவிகளை விடுதியில் அடைத்து விடிய விடிய வாலிபர்கள் செய்த விபரீத செயல் ;அதிர்ந்த கேரளா

திருவனந்தபுரம், ஜூன்.20-

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் மூணாறு பகுதியை சேர்ந்த 2 பிளஸ் 1 மாணவிகளை அறையில் அடைத்து 2 நாட்களாக விடிய விடிய பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் கேரளாவையே அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

மூணாறு பகுதியை சேர்ந்த பிளஸ் 1 மாணவிகள் 2 பேர் விடுதியில் தங்கி படித்து வந்தனர். அவர்கள் கடந்த 15ம் தேதி முதல் 2 நாட்கள் பள்ளிக்கு வரவில்லை. அவர்கள் தங்கள் வீட்டுக்கு சென்றிருக்கலாம் என வகுப்பு ஆசிரியரும் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டார்.

2 நாட்கள் கழித்து பள்ளிக்கு மாணவிகள் மிகவும் சோர்வுடன் வந்தனர். அப்போது வகுப்பு ஆசிரியை ஏன் 2 நாட்கள் பள்ளிக்கு வரவில்லை? விடுமுறை கடிதமும் அளிக்கவில்லை என கேட்டுள்ளார்.

அப்போது மாணவிகள் அளித்த பதிலை கேட்டு ஆசிரியை அதிர்ச்சி அடைந்தனார். இன்ஸ்டா மூலம் தங்களுக்கு இரு வாலிபர்கள் அறிமுகமானதாகவும் அவர்கள் பேச்சை நம்பி கடந்த 15ம் தேதி மாட்டுப்பட்டி ரோட்டில் உள்ளதனியார் லாட்ஜுக்கு அழைத்து சென்றனர்.

அப்போது அந்த வாலிபர்கள் லாட்ஜில் அறை எடுத்து தங்கி தங்கலை 2 நாட்களாக விடிய விடிய பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் இது குறித்து வெளியில் யாரிடமாவது கூறினால் விபரீதமாகிவிடும் என எச்சரித்து மிரட்டி அனுப்பியதாக கூறினர்.

இதை கேட்டு மேலும் அதிர்ச்சி அடைந்த ஆசிரியை மூணாறு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.அவரது புகாரின் பேரில் மாட்டுப்பட்டியில் உள்ள சம்மந்தப்பட்ட் விடுதிக்கு போலீசார் சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். லாட்ஜில் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கேமரா பதிவுகள், மாணவிகள் பயன்படுத்திய செல்போன் உரையாடல்கள் ஆகியவற்றையும் சைபர் கிரைம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மேகேதாட்டு அணை திட்டம் குறித்து தமிழக முதல்வர் விஜய்யுடன் பேச தயார்: கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் அறிவிப்பு



பெங்களூரு, ஜூன்.20-
மேகேதாட்டு அணை திட்டம் குறித்து தமிழக முதல்வர் விஜய்யுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்தார்.
இது குறித்து பெங்களூருவில் கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: மேகேதாட்டு அணை திட்டம் என் இதயத்துக்கு நெருக்கமானது மட்டுமல்ல. ஒட்டுமொத்த தென்னிந்தியாவுக்கும் நெருக்கமானது. உச்ச நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின்படி ஆண்டுதோறும் தமிழகத்துக்கு 177 டிஎம்சி நீரை வழங்க கர்நாடகா தயாராக இருக்கிறது.
இந்த திட்டம் தொடர்பாக தமிழக முதல்வர் விஜய்யுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறேன். இந்த திட்டத்தால் இரு மாநிலங்களுக்கும் நன்மை ஏற்படும். கன்னடர்களாக இருந்தாலும், தமிழர்களாக இருந்தாலும் நாமெல்லாம் இந்தியர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.தமிழகத்தை சேர்ந்தவர்கள் கர்நாடகாவிலும், கர்நாடகாவை சேர்ந்தவர்கள் தமிழகத்திலும் வாழ்கிறார்கள். நீர் அனைத்து மக்களுக்கும் தேவையான ஒன்று. மேகேதாட்டு திட்டமானது சம நிலை அணை திட்டமாகும். அங்கு நீரை தேக்கினால் வறட்சி காலத்தில் தமிழகத்துக்கு நீரை எளிதாக திறந்துவிடலாம். தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரில் இருந்து ஒரு வாளி நீரை கூட நம்மால் எடுக்க முடியாது. அணை நீரை பெங்களூரு மக்களின் குடிநீர் தேவைக்கு பயன்படுத்த முடியும். மண்டியா, ஹாசன், சாம்ராஜ்நகர், துமகூரு ஆகிய மாவட்டங்களுக்கும் எளிதாக குடிநீர் வழங்கலாம். இந்த திட்டத்துக்கு மத்திய நீர் ஆணையம் விரைந்து அனுமதி வழங்க வேண்டும். மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகாவில் காங்கிரஸ், பாஜக, மஜத ஆகிய அனைத்துக் கட்சி எம்.பிக்களும் ஒருமித்த குரலில் செயல்படுவார்கள் . இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கருப்பொருளைக் கையில் எடுத்த சோனா குழுமம்! 1000க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற சர்வதேச யோகா தினம்!




சேலம், ஜூன்.20-
ஆண்டுதோறும் ஜூன் 21 ஆம் தேதி உலகளவில் சர்வதேச யோகா தின விழா மிக விமரிசையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், நிகழாண்டு மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் அறிவித்துள்ள "ஆரோக்கியமான முதுமைக்கான யோகா" என்ற உன்னதக் கருப்பொருளை மையமாகக் கொண்டு, சேலம் சோனா கல்வி நிறுவனங்களின் சார்பில் சர்வதேச யோகா தின விழா கல்லூரியின் பிரம்மாண்ட விளையாட்டு மைதானத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
*துணைத்தலைவர் தலைமையில் திரண்ட பேராசிரியர்கள்:*
சோனா கல்வி நிறுவனங்களின் துணைத்தலைவர் தியாகு வள்ளியப்பா தலைமையில் நடைபெற்ற இந்த எழுச்சிமிகு விழாவில், கல்லூரியின் இயக்குநர் வீ.கார்த்திகேயன், சோனா கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள் எஸ்.ஆர்.ஆர்.செந்தில்குமார், கனகராஜ், காதர்நவாஷ், கவிதா, தர்மசம்வர்த்தினி மற்றும் பேராசிரியர்கள் உட்பட 1,000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு அணிவகுத்து யோகாசனங்களைச் செய்தனர்.*உடல், மனம் காக்கும் பண்டைய இந்தியப் பயிற்சி:*
விழாவில் சோனா கல்வி நிறுவனங்களின் துணைத்தலைவர் தியாகு வள்ளியப்பா சிறப்புரையாற்றுகையில், "ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21ஆம் தேதி உலகமே ஒன்று சேர்ந்து சர்வதேச யோகா தினத்தைக் கொண்டாடி மகிழ்கிறது. இந்த உலகளாவிய நிகழ்வானது, இந்தியாவின் பண்டைய காலத்துப் பயிற்சியான யோகாவின் முக்கியத்துவத்தை உலகிற்குப் பறைசாற்றுகிறது. மனிதனின் உடல், மனம் மற்றும் உணர்ச்சி ரீதியிலான நல்வாழ்வை மேம்படுத்தவும், வயது முதிர்ந்த காலத்திலும் சுறுசுறுப்பான, ஆரோக்கியமான முதுமையை உறுதிப்படுத்தவும் யோகா கலை எவ்வளவு இன்றியமையாதது என்பதை இந்த நாளின் கருப்பொருள் நமக்கு வலியுறுத்துகிறது" என்று பெருமிதத்துடன் தெரிவித்தார்.யோகா நடனமும் சான்றிதழ் வழங்கிப் பாராட்டுகளும்:
இவ்விழாவின் முக்கிய அம்சமாக, சோனா கல்வி நிறுவனங்களின் மாணவ, மாணவிகள் இணைந்து நடத்திய அசாத்திய 'யோகா நடன நிகழ்ச்சி' பார்ப்போரை வியப்பில் ஆழ்த்தும் வகையில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, யோகாசனப் போட்டிகளில் சிறப்பாகச் செயல்பட்டு முத்திரை பதித்த மாணவ, மாணவிகளுக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, சிறப்புப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# “சட்டப்பேரவை முழு நேரலை வெறும் உருட்டா?” தவெகவுக்கு அதிமுக கண்டனம்



சென்னை, ஜூன்.20-
சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் தொடங்கிய நிலையில், பேரவையின் நேரலை ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதற்கு, “நேரலை என்பது வெறும் உருட்டா?. ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை” என அதிமுக விமர்சித்துள்ளது.
தமிழக சட்டப்பேரவையின் இரண்டாம் நாள் கூட்டத்தொடர் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது. முதலில் மறைந்த மூத்த தலைவர்கள், திரைப் பிரபலங்கள், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் தொடங்கிய நிலையில், பேரவையின் நேரலை ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது.
இந்நிலையில், இது குறித்து அதிமுக ஐடி விங் தனது எக்ஸ் தளத்தில், “ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் தொடங்கிய நிலையில், பேரவையின் நேரலை ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது. முழு நேரலை.. முழு நேரலை... அத்தனையும் உருட்டா சார். ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை. நன்றாக இருக்கிறது சார் உங்கள் மாற்றம். எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றுவது போன்ற ஐடியா இல்லை போல, அப்படித்தானே சார்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
முன்னதாக, “இரண்டு, மூன்று ஆண்டுகளாக இருட்டடிப்பு செய்யப்பட்ட சட்டப்பேரவை நேரலை, மீண்டும் தொடங்கியிருக்கிறது. இனி சட்டப்பேரவை நேரலை தொடரும்” என அமைச்சர் ராஜ்மோகன் நேற்று தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது

# “கர்நாடக நலனை பாதுகாப்போம்” தமிழகத்தின் மேகேதாட்டு தீர்மானம் குறித்து பிரியங்க் கார்கே கருத்து



மைசூரு, ஜூன்.20-
காவிரி விவகாரத்தில் கர்நாடகத்தின் நலனை மாநில அரசு பாதுகாக்கும் என்று அம்மாநில அமைச்சர் பிரியங்க் கார்கே தெரிவித்துள்ளார்.
மைசூரில், இது தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த பிரியங்க் கார்கே, “தமிழக அரசு தாங்கள் விரும்பும் எந்த ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றிக்கொள்ள அவர்களுக்கு முழு உரிமை உள்ளது. அவர்கள் என்ன தீர்மானம் நிறைவேற்றுகிறார்கள் என்பது எங்கள் விஷயமல்ல. ஒவ்வொரு மாநிலமும் அதன் மக்களின் நலன்களுக்காகவே பணியாற்றுவார்கள் என்பது இயல்பானது. தமிழக அரசு தமிழக மக்களின் நலன்களுக்காக பணியாற்றுகிறது. நாங்கள் கர்நாடக மக்களின் நலன்களுக்காக பணியாற்றுகிறோம். இதில் எந்தத் தவறும் இல்லை.
நமது மாநிலத்தின் நலன்களைப் பாதுகாப்பதே எனது பொறுப்பு. அவர்கள் அவர்களது மாநிலத்தின் நலன்களைக் கருத்தில் கொண்டு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆனால், உச்ச நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளது. கடலில் வீணாக கலக்கும் கூடுதல் நீரை மட்டுமே கர்நாடக மக்களுக்காக, பெங்களூருக்காக நாம் சேமிக்க விரும்புகிறோம். நாம் யாருக்கும் அநீதி இழைக்க மாட்டோம்.அவர்கள் சட்டப்போராட்டத்தைத் தொடரவோ அல்லது சட்ட ரீதியில் தீர்வைக் காணவோ விரும்பினால், அதைச் செய்ய அவர்களுக்கு முழு சுதந்திரம் உள்ளது. நாம் யாருடைய உரிமையையும் பறிக்க முயலவில்லை. தண்ணீர் தொடர்பான யாருடைய உரிமையையும் நாம் பறிக்க முயலவில்லை. உபரியாக வெளியேறும் நீரை மட்டுமே நாம் நமது மக்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ள முயல்கிறோம். சட்ட ரீதியாக என்ன செய்ய வேண்டுமோ அதை அவர்களும் செய்யலாம்” என தெரிவித்துள்ளார்.
மேகேதாட்டு விவகாரம் குறித்து பெங்களூருவில் நேற்று (ஜூன் 18) செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார், “மேகேதாட்டு திட்டம் எனது மனதுக்கு நெருக்கமானது மட்டுமல்ல, அது ஒட்டுமொத்த தென்னிந்தியாவுக்கும் மிக முக்கியமானது. உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, காவிரியில் இருந்து தமிழகத்துக்கு விடுவிக்க வேண்டிய நீர் எவ்வளவோ அந்த நீரை விடுவிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அதற்கான உறுதிமொழியை தொடர்ந்து கடைப்பிடிப்போம்.
மேகேதாட்டு திட்டம் என்பது, நீர் பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு சமநிலைப்படுத்தும் நீர்த்தேக்கத் திட்டமாகும். இந்த திட்டத்தின் மூலம் பெறப்படும் நீரில் ஒரு டிஎம்சி நீரைக்கூட நாம் பாசனத்துக்காகப் பயன்படுத்த முடியாது. இதன் முதன்மை நோக்கம் குடிநீர் வழங்குவதே. குறிப்பாக, பெங்களூரு நகரில் மக்கள் தொகை வேகமாக அதிகரித்து வருகிறது. அந்த நகரத்துக்கு இந்த குடிநீர் மிகவும் அவசியம். கிருஷ்ணா நதியில் இருந்து நாம்மால் நீரைப் பெற முடியாது. காவிரி மட்டுமே நமக்குள்ள ஒரே நீர் ஆதாரம். ஒரு சமநிலைப்படுத்தும் நீர்த்தேக்கத்தை அமைப்பதன் மூலம் நீரை கூடுதல் திறனுடன் சேமித்து நிர்வகிக்க முடியும்” என தெரிவித்திருந்தார்



# நெல்லை வண்ணார்பேட்டை மேம்பாலத்தில் குப்பைகளை மூட்டையாக போடும் அவலம்

நெல்லை, ஜூன்.20-
நெல்லை வண்ணார்பேட்டை மேம்பாலத்தில் குப்பைகளை மூட்டையாக கட்டிபோட்டு செல்வதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. நெல்லை மாநகர பகுதியில் ஏற்பட்டு வந்த போக்குவரத்து நெருக்கடியை தீர்க்க வேண்டி வடக்கு தெற்கு புறவழிச்சாலை அமைக்கப்பட்டது.
இதைதொடர்ந்து வண்ணார்பேட்டையில் சந்திப்பு பாளை பகுதியை இணைக்கும் சாலையும், வடக்கு தெற்கு புறவழிச்சாலை சந்திக்கும் பகுதியில் ரவுண்டானா அமைக்கப்பட்டது.
இந்த ரவுண்டானாவில் புறவழிச்சாலையில் இருந்து எதிர், எதிர் பயணிக்கும் வாகனங்கள், அரசு பஸ்களும், சந்திப்பு பஸ்நிலையம், பாளை பஸ்நிலையத்தில் இருந்து வரும் வாகனங்களும் வண்ணார்பேட்டை ரவுண்டானாவில் சிக்கி திணறி போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.
இதைத்தொடர்ந்து ரவுண்டானாவின் சுற்றளவு குறைக்கப்பட்டது. இருந்தபோதும் ரவுண்டானா பகுதியில் போக்குவரத்து நெருக்கடி குறைந்த பாடில்லை. இந்நிலையில் தான் வண்ணார்பேட்டையில் மேம்பாலம் அமைக்கப்பட்டது. இதை தொடர்ந்து பாளையில் இருந்து சந்திப்புக்கும், சந்திப்பில் இருந்து பாளைக்கும் செல்லும் வாகனங்கள் மேம்பாலத்தின் கீழ் பகுதி வழியாக இயக்கப்பட்டு வருகின்றன.
அதேநேரத்தில் புதிய பஸ்நிலையம், திருவனந்தபுரத்தில் இருந்து சென்னை, மதுரை செல்லும் அரசு, தனியார் ஆம்னி பஸ்கள் வண்ணார்பேட்டை ரவுண்டானா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலத்தில் இயக்கப்படுகின்றன.
இந்த மேம்பாலத்தின் இருபுறத்திலும் மணல் குவியல், குப்பைகள், பிளாஸ்டிக் கழிவுகள், குப்பைகள் நிறைந்த மூட்டையும் கிடக்கிறது. இது பாலத்தில் பயணிக்கும் வாகன ஓட்டிகள், பொதுமக்களை முகம்சுளிக்க வைக்கிறது. ஆகவே மேம்பாலத்தில் தேங்கி உள்ள குப்பைகள், மணலை அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் எதிர்பார்க்கின்றனர்

# ஜூலை 4, 5ம் தேதி நடைபெறவுள்ள டெட் தேர்வு தாள் 1, தாள் 11 தேர்வுக்கான ஹால் டிக்கெட் வெளியீடு!



சென்னை, ஜூன்.20-
ஜூலை 4, 5ம் தேதி நடைபெறவுள்ள டெட் தேர்வு தாள் 1, தாள் 11 தேர்வுக்கான ஹால் டிக்கெட் வெளியிடப்பட்டுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் தேர்வர்கள் இன்று முதல் ஹால் டிக்கெட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஹால் டிக்கெட்டை பதிவிறக்கம் செய்ய இயலாதவர்கள் ஜூன் 22 முதல் 30 வரை சிறப்பு முகாமில் பெற்றுக் கொள்ளலாம். தமிழ்நாடு ஆசிரியர் தகுதித்தேர்வு ஜூலை 4,5ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.
பள்ளிகளில் ஆசிரியராகப் பணிபுரிய மற்றும் பதவி உயர்வு பெற ஆசிரியர் தகுதித் தேர்வில்(டெட்) தேர்ச்சி பெறுவதை உச்சநீதிமன்றம் கட்டாயமாக்கியது.
மேலும், இதுவரை தேர்ச்சி பெறாத ஆசிரியர்கள் தேர்வெழுதி தேர்ச்சி பெறவும் உத்தரவிட்டது. இதையடுத்து தமிழகத்தில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 1.75 லட்சம் ஆசிரியர்கள் டெட் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் ஆசிரியர்களின் வசதிக்காக 3 சிறப்பு டெட் தேர்வு நடத்தப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை அறிவித்தது.அந்த வகையில் பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கான முதல் சிறப்பு டெட் தேர்வு ஜூலை 4, 5ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது

# விவசாய பணிகளிலும் களம் இறங்கிய வடமாநிலத்தினர்

கிணத்துக்கடவு, ஜூன்.20-
கிணத்துக்கடவு மற்றும் நெகமம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள தென்னை நார் தொழிற்சாலை, பனியன் கம்பெனி, நூல் மில்கள் மற்றும் கட்டிட வேலை உள்ளிட்ட அனைத்து பணிகளிலும் 90 சதவீத வடமாநில தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.
அது மட்டுமின்றி, கல்குவாரிகள்.பேக்கரிகள், ஜவுளிக்கடைகள், வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் வடமாநில தொழிலாளர்களே அதிகளவில் பணியாற்றி வருகின்றனர்.
கிணத்துக்கடவு, நெகமம் பகுதிகளில் அதிகளவில் வட மாநிலத்தவர்கள் வசித்து வருவதால், அவர்களுக்கு இது தமிழ்நாடு என்ற நினைப்பே வருவதில்லை என்று கூறப்படுகிறது. இவர்களின் வருகையால் வேலையிழந்து தவிக்கும் உள்ளூர் தொழிலாளர்கள் விவசாய கூலி வேலைக்கு மட்டும் சென்று குடும்பம் நடத்தி வருகின்றனர்.
இந்த நிலையில், வடமாநில தொழிலாளர்கள் தற்போது விவசாய கூலி வேலைகளுக்கும் செல்ல துவங்கிவிட்டனர். இதனால் உள்ளூர் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. வடமாநில தொழிலாளர்கள் 10 மற்றும் 20 பேர் ஒரு குழுவாக சேர்ந்து, தங்களுக்குள் ஒரு மேஸ்திரியை நியமித்துக்கொண்டு, ஏக்கர் கணக்கில் மொத்தமாக ஒப்பந்தம் பேசி, நாற்று நடுதல், களை எடுத்தல், மக்காச்சோளம், சோளம் வெட்டுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு, குறித்த நேரத்திற்குள் செய்து முடித்து விடுகின்றனர். இதனால், உள்ளூர் தினக்கூலி தொழிலாளர்கள் வேலையிழந்து தவித்து வருகின்றனர். இதன் காரணமாக கிராமப்புறங்களில் உள்ளூர் தொழிலாளர்களுக்கு வேலை இல்லா திண்டாட்டம் ஏற்படும் நிலை உருகியுள்ளது

# “மனு அளித்து அடுத்த கணமே கைக்கு வந்த அடையாள அட்டை!” திருப்பணிபுத்தன்தருவை மாற்றுத்திறனாளிகள் முகாமில் அதிரடி!



சாத்தான்குளம், ஜூன்.20-
தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கறாரான உத்தரவின் பேரில், சாத்தான்குளம் அருகே உள்ள திருப்பணிபுத்தன்தருவை ஊராட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நேற்று மிக நேர்த்தியாக நடைபெற்றது.
*மாவட்ட ஆட்சியர் உத்தரவும் பிரம்மாண்டத் தொடக்கமும்:*
தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் விஷு மகாஜன் அவர்களின் அறிவுறுத்தலின்படி, திருப்பணிபுத்தன்தருவை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இந்தச் சிறப்பு முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இம்முகாமிற்குச் சாத்தான்குளம் ஒன்றிய ஆணையாளர் வாவாஜி பக்கீர் முகைதீன் தலைமை தாங்கி, முகாமினை முறைப்படி தொடங்கி வைத்தார்.
*30க்கும் மேற்பட்ட மனுக்கள் ரூ 19 பேருக்கு உடனடி ஆணை:*
இச்சிறப்பு முகாமில் திருப்பணிபுத்தன்தருவை மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டு, தங்களுக்கான பிரத்யேக மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் அரசு வழங்கும் உதவி உபகரணங்கள் (Welfare Aids) வேண்டி முறைப்படி மனுக்களை அளித்தனர். பெறப்பட்ட மனுக்களை அதிகாரிகள் உடனடியாகப் பரிசீலனை செய்து, அதில் தகுதியுள்ள 19 மாற்றுத்திறனாளிகளுக்கு எவ்வித காலதாமதமுமின்றி முகாம் மேடையிலேயே புதிய அடையாள அட்டைகளை அஞ்சல் மற்றும் நேரிடையாக வழங்கினர். மேலும், மாற்றுத்திறனாளிகள் அரசு வழங்கும் பல்வேறு மாதாந்திர உதவிகள் மற்றும் சலுகைகளைப் பெறுவதற்கான எளிய வழிமுறைகள் குறித்து அதிகாரிகளால் விரிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
இந்நிகழ்வில் சாத்தான்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் பாலமுருகன், கேட்டல் மற்றும் பேச்சு பயிற்சியாளர் சங்கர், இளநிலை மறுவாழ்வு அலுவலர் பெருமாள் தேவி, மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மைய சாத்தான்குளம் வட்டார ஒருங்கிணைப்பாளர் லட்சுமி மற்றும் தமிழ்நாடு உரிமைகள் திட்டப் பணியாளர்கள் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பலரும் திரளாகக் கலந்துகொண்டு சாமானிய மக்களுக்குச் சேவையாற்றினர்.



## "4 மாதங்களாக இழுபறியில் சாக்கடைப் பணி... முடங்கிய நகரமன்றக் கூட்டம்!" திருமுருகன்பூண்டியில் CPI-M அதிரடி மனு!

திருமுருகன்பூண்டி, ஜூன்.20-
திருமுருகன்பூண்டி நகராட்சியில் மந்தகதியில் நடைபெறும் சாக்கடைப் பணிகளை விரைந்து முடிக்கக் கோரியும், பல மாதங்களாக முடங்கிக்கிடக்கும் நகரமன்றக் கூட்டத்தை உடனடியாக நடத்த வலியுறுத்தியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் (CPI-M) சார்பில் நகராட்சி நிர்வாகத்திடம் முக்கியக் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

*நான்கு மாதங்களாகத் தொடரும் அவதி ஸ்ரீ முடங்கிய வியாபாரம்:*

திருமுருகன்பூண்டி நகராட்சிக்குட்பட்ட அம்மாபாளையம் மெயின் ரோடு, 27வது வார்டு பகுதியில் புதிய சாக்கடை அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. ஆனால், இப்பணி தொடங்கி நான்கு மாதங்களுக்கு மேலாகியும் இன்னும் நிறைவடையாமல் ஆமை வேகத்தில் நடந்து வருகிறது. இதனால் இப்பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், பொதுமக்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் காலை நேரங்களில் நடந்து செல்லக்கூட முடியாமல் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். மேலும், சாலையோரக் கடைக்காரர்களின் அன்றாட வியாபாரமும் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரம் கேள்விக் குறியாகியுள்ளது எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

*நகரமன்றக் கூட்டம் நடத்தக் கோரிக்கை:*

இது ஒருபுறமிருக்க, திருமுருகன்பூண்டி நகராட்சியில் முறைப்படி நகரமன்றக் கூட்டம் நடத்தப்பட்டு நான்கு மாதங்களுக்கு மேலாகிறது. உள்ளாட்சி நிர்வாகத்தில் மக்கள் பிரதி நிதிகள் கூடி விவாதித்தால் மட்டுமே வார்டு வாரியாக உள்ள மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். எனவே, உடனடியாக நகரமன்றக் கூட்டத்தைக் கூட்டி மக்கள் நலப்பணிகளை முடுக்கிவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

*திரண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர்கள்:*

இக்கோரிக்கைகளை முன்வைத்து நகராட்சி அதிகாரிகளிடம் முறைப்படி மனு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய குழு உறுப்பினர்கள் எஸ்.வெங்கடாசலம், ஆர்.பாலசுப்பிரமணியம், கிளைச் செயலாளர் எஸ்.ராஜு, வி.கே. தங்கவேல், கே.குமாரசாமி, ஆறுமுகம், எம்.ஈஸ்வரன், ஆர்.நாகராஜ், ஆர்.ஈஸ்வரன் மற்றும் DYFI ஒன்றிய தலைவர் கே.சந்தோஷ்குமார் உள்ளிட்ட தோழர்கள், பொதுமக்கள் எனப் பலர் திரளாகக் கலந்துகொண்டு தங்களின் கோரிக்கைகளை பதிவு செய்தனர்.

## திசையன்விளையில் ராகுல் காந்தி பிறந்தநாள் கொண்டாட்டம்! திரண்ட காங்கிரஸ் பட்டாளம்! கிழக்கு மாவட்டத் தலைவர் வி.பி.துரை பங்கேற்பு!



திசையன்விளை, ஜூன்.20-
நெல்லை மாவட்டம் திசையன்விளையில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி அவர்களின் பிறந்தநாள் விழா திசையன்விளை நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகில் விழா நிகழ்வுகள் நடைபெற்றன.

*காமராஜர் சிலைக்கு மாலை அணிவிப்பு:*

திசையன்விளை நகர காங்கிரஸ் தலைவர் ஏவிஜே.அல்பார்ட் தலைமை தாங்கினார். ராதாபுரம் தொகுதி காங்கிரஸ் பொறுப்பாளர் விவேக் முருகன் முன்னிலை வகித்து விழாவினை ஒருங்கிணைத்தார்.

*மாவட்டத் தலைவர் வி.பி.துரை இனிப்பு வழங்கல்:*

இவ்விழாவில் நெல்லை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் வி.பி.துரை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அவர் பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின், அங்கு திரண்டிருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கும், நெகிழ்ச்சியோடு வழிப்போக்கர்களுக்கும் ராகுல் காந்தியின் பிறந்தநாள் இனிப்புகளை வழங்கித் தனது வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.


*திரண்ட காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகள்:*

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் விஜய பெருமாள், மாவட்ட செயலாளர் மருதூர் மணிமாறன், மாவட்ட வர்த்தகப் பிரிவு தலைவர் ஐசக், மாவட்ட மகளிர் காங்கிரஸ் தலைவி குளோரிந்தா, மாவட்ட ஆர்டிஐ பிரிவு தலைவர் ராஜீவ் மற்றும் காமராஜர் நற்பணி இயக்கத் தலைவர் எஸ்ஜி.ராஜன் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், ஏபிசி பிரிவு தனசிங் பாண்டியன், காங்கிரஸ் முன்னணி நிர்வாகிகள் குட்டம் சிவாஜி முத்துக்குமார், ஆனைகுடி ஜெய பாண்டி, இளைஞர் காங்கிரஸ் ராஜ்குமார், பொன்ராஜ், அந்தோணி ராஜ், மிக்கேல் ராஜ், அனிதா ஜான்சன், வேல்த்தாய், ஆரஞ்சு முருகேசன், பேச்சிமுத்து, கிருத்துவம் டி, யோவான், பிச்சையா மற்றும் கிருபாகரன் உட்படப் பலர் திரளாகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

## வாழவந்தி கிராமத்தில் தனியார் பள்ளி வேன் மோதி 3 ஆம் வகுப்பு மாணவி உயிரிழப்பு!



சேலம், ஜூன்.20-
சேலம் மாவட்டம் ஏற்காடு வாழவந்தி கிராமத்தை சேர்ந்தவர் கிருஷ்ணன். இவரது மகள் மேனகா(8). இவர் ஏற்காடு முண்டகம்பாடி கிராமத்தில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் 3ஆம் வகுப்பு படித்து வருகிறார். மேனகா வாழவந்தி மற்றும் ஏற்காடு டவுன் பகுதியில் உள்ள பல்வேறு பள்ளிகளில் படிக்கும் பள்ளி குழந்தைகளை ஏற்றி வரும் தனியார் வேனில் பள்ளிக்கு சென்று வருவது வழக்கம். அதே போல் மாணவி இன்றும் வேனில் பள்ளிக்கு புறப்பட்டார். வேனை கீரைக்காடு புத்தூர் கிராமத்தை சேர்ந்த பெத்தமணி மகன் ரங்கநாதன் என்பவர் ஓட்டினார். வேனில் வந்த குழந்தைகளை பல்வேறு பள்ளிகளில் இறக்கிவிட்ட நிலையில் ஏற்காடு லேடீஸ் சீட் சாலையில் உள்ள தனியார் பள்ளியில் இறக்கி விட்டு டிரைவர் ரங்கநாதன் வேனின் பின்னால் மேனகா இருப்பதை கவனிக்காமல் வேனை பின்னோக்கி இயக்கி உள்ளார்.அப்போது வேனின் பின்னால் இருந்த மேனகா மீது வேன் மோதி விபத்துக்குள்ளானது. அங்கிருந்தவர்கள் அலறல் சத்தம் கேட்டு டிரைவர் வேனை நிறுத்தி பார்த்த போது மேனகா தலை நசுங்கி ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடினார். உடனடியாக அங்கிருந்தவர்கள் மேனகாவை மீட்டு ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு மேனகாவை பரிசோதித்த மருத்துவர் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினர். இந்த தகவலறிந்து மருத்துவமனைக்கு வந்த மேனகாவின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் மேனகாவின் உடலை பார்த்து கதறி அழுது புரண்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இதற்கிடையே அங்கு சென்ற ஏற்காடு போலீசார் வேன் டிரைவர் ரங்க நாதனை கைது செய்து போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.



## வேலிவியூ அருகே எச்சரிக்கையை மீறி மலை ரயில் தண்டவாளத்தில் அத்துமீறும் சுற்றுலா பயணிகள்

ஊட்டி, ஜூன்.20-
ஊட்டி அருகே வேலிவியூ பகுதியில் மலைரயில் தண்டவாளம் மற்றும் குகைக்குள் செல்ல கூடாது என்ற எச்சரிக்கையை மீறி அத்துமீறும் சுற்றுலா பயணிகளால் விபத்து அபாயம் நீடிக்கிறது.நீலகிரி மாவட்டம் ஊட்டி சர்வதேச சுற்றுலா நகரமாக விளங்கி வருகிறது.

மேட்டுப்பாளையம் முதல் ஊட்டி வரை இயக்கப்படும் நூற்றாண்டு பழமை வாய்ந்த மலை ரயிலில் பயணிக்க வெளி மாநிலங்களில் இருந்து மட்டுமின்றி, பல்வேறு வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகளும் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஊட்டி மலை ரயில் பாதையில் பல்வேறு இடங்களில் குகைகள், பாலங்கள் உள்ளன. இந்த சூழலில் ஊட்டி குன்னூர் இடையே மலை ரயில் பாதையில் வேலிவியூ பகுதியில் கேத்தி செல்லும் சாலையை ஒட்டி மலை ரயில் செல்லும் குகை உள்ளது.

சிலர் இந்த இடத்திற்கு சுற்றுலா பயணிகளை அழைத்து செல்கின்றனர். கடந்த சில நாட்களாக கோடை சீசனின் போது சுற்றுலா பயணிகள் அதிகளவு வந்த நிலையில், வெளியூர் சுற்றுலா பயணிகள் சிலர் அந்த மலை ரயில் குகைக்கு சென்றுள்ளனர். குகை இருட்டாக இருந்த நிலையில் அதனுள் சென்று பார்வையிட்டு வீடியோ எடுத்துள்ளனர். அப்போது திடீரென மலை ரயில் வந்த நிலையில் குகைக்குள் ஒதுங்க வழியில்லாததால் உள்ளே இருந்த சுற்றுலா பயணிகள் அலறியடித்து கொண்டு வெளியே ஓடி வந்து உயிர் தப்பியுள்ளனர். இந்த வீடியோ வைரலான நிலையில் இது தொடர்பான செய்தி நமது நாளிதழில் வெளியானது.

இதனை தொடர்ந்து ரயில்வே நிர்வாகம் சார்பில் இந்த பகுதியில் எச்சரிக்கை பலகை அமைக்கப்பட்டுள்ளது. அதில் தண்டவாள பகுதியில் அத்துமீறி நுழைய கூடாது. மீறி நுழைவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சூழலில் இந்த எச்சரிக்கையும் மீறி இப்பகுதிக்குள் சுற்றுலா பயணிகள் நுழைவது அதிகரித்துள்ளது. இதனை தடுக்க ரயில்வே நிர்வாகம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது

## அம்மா உணவக இட்லிகளை தனியார் ஓட்டல்களுக்கு விற்கப்பட்டதாக புகார்: 2 ஊழியர்கள் டிஸ்மிஸ்




தூத்துக்குடி, ஜூன்.20-
தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகராட்சி அலுவலகம் அருகே அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. இந்த அம்மா உணவகத்தில் தயாரிக்கப்படும் இட்லி தனியார் உணவகங்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், அங்கு சாப்பிட வருபவர்களுக்கு இட்லி கிடைப்பதில்லை என்ற புகார் எழுந்தது. இதனைத்தொடர்ந்து நேற்று நெல்லை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர் ரவிச்சந்திரன் அம்மா உணவகத்தில் திடீரென ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அம்மா உணவுகளத்தில் உணவு வகைகள் பார்சல் வழங்க தடை விதித்தார். மேலும், புகார்கள் குறித்து உரிய விசாரணை நடத்தி தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்று தெரிவித்திருந்தார். அம்மா உணவகத்தில் ஏழை எளிய மக்களுக்காக ரூ. 1க்கு வழங்கப்படும் இட்லிகளை மொத்தமாகப் பார்சல் செய்து, வெளி ஹோட்டல்களுக்கு ரூ. 5 முதல் ரூ.10 வரை லாபத்திற்கு ஊழியர்கள் சட்டவிரோதமாக விற்பனை செய்துள்ளனர்.முதற்கட்ட விசாரணையில் முறைகேடு உறுதி செய்யப்பட்டதை அடுத்து, சம்பந்தப்பட்ட கங்கா, சங்கரேஸ்வரி ஆகிய இரு ஊழியர்களும் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டனர். அம்மா உணவக விதிகளின்படி அங்கு அமர்ந்து சாப்பிட மட்டுமே அனுமதிக்க வேண்டும் என்பதால், இனி யாருக்கும் எக்காரணம் கொண்டும் இட்லி பார்சல் வழங்கக் கூடாது என அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

## சென்னை பூவிருந்தவல்லிவடபழனி மெட்ரோ ரயில் சேவை தொடங்குவதில் மேலும் தாமதம்

சென்னை, ஜூன்.20-
சென்னை பூவிருந்தவல்லி வடபழனி இடையே மெட்ரோ ரயில் பணிகள் முழுமையாக நிறைவடைந்திருக்கும் நிலையில், மெட்ரோ ரயில் சேவை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் முதல் முதலாக நிறைவடைந்திருக்கக்கூடிய பூவிருந்தவல்லி பைபாஸ் முதல் மற்றும் வடபழனி வரையிலான 14.6 கிலோமீட்டர் நீளமுடைய இந்த வழித்தடத்தில், மெட்ரோ ரயில் சேவை விரைவில் தொடங்கப்படும் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட சூழ்நிலையில் இது வரை இந்த திட்டம் தொடங்கப்படாமல் இருப்பது ஏமாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.இந்த வழித்தடத்தில் மெட்ரோ சேவையைத் தொடங்குவதற்கான துவக்க விழா தேதியை நிர்ணயிக்குமாறு ஒன்றிய அரசிடம் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் கோரிக்கை வைத்தும் இதுவரை தேதி அறிவிக்கப்படவில்லை என கூறப்படுகிறது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ரயில் சேவை தொடங்க திட்டமிடப்பட்ட நிலையில், அது இந்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு மாற்றப்பட்ட நிலையிலும் இன்னும் தாமதம் நீடிக்கிறது. அனைத்து பாதுகாப்பு சோதனைகளும் நிறைவடைந்து, ரயில் சேவையைத் தொடங்கும் வகையில் அனைத்தும் தயார் நிலையில் உள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவன தகவல் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது

## காவிரி நீரை காலத்தோடு பெற தவெக அரசு சட்ட நடவடிக்கை



சென்னை, ஜூன்.20-
தமிழகத்துக்கான நீரை உரியகாலத்தில் பெற்றுத்தர தேவையான சட்ட நடவடிக்கைகளை தவெக அரசு எடுத்து வருகிறது என்று ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆளுநர் உரையில் கூறியிருப்பதாவது: காவிரி டெல்டா மாவட்டங்களின் பிரதான நீர் ஆதாரமாக காவிரி நீர் உள்ளது. காவிரி நீரை பயன்படுத்துவதில் தமிழகத்துக்கு உள்ள உரிமையை உச்ச நீதிமன்றத்தில் நிலைநாட்டிய பின்பும் காவிரி நீரை பெற ஆண்டு தோறும் போராட வேண்டிய நிலை இருக்கிறது.

உரிய நீருக்கு பதிலாக உபரி நீர் தான் தமிழகத்துக்கு கர்நாடக அரசால் வழங்கப்படுகிறது. இந்நிலையில், மேகேதாட்டு திட்டத்தை செயல்படுத்த கர்நாடக அரசு முயன்று வருகிறது.இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன், வேளாண் உற்பத்தியும் கடுமையாகப் பாதிப்படையும். தமிழகத்துக்கான நீரை உரிய காலத்தில் பெற்றுத்தரவும் தேவையான சட்ட நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

கேரள அரசின் புதிய அணை கட்டும் முயற்சியை தடுக்கவும், முல்லை பெரியாறு அணையில் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ளவும், அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்தவும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.நதிநீர் இணைப்பு திட்டத்தை செயல்படுத்த, முதற்கட்டமாக தமிழகத்தில் உள்ள நதிகளை இணைக்கவும், பின்னர், மத்திய அரசிடம் வலியுறுத்தி, தென் மாநிலங்களில் உள்ள நதிகளை இணைக்கவும் அரசு தீவிர முயற்சி மேற்கொள்ளும்.

ஏரி, குளங்கள் பராமரிப்பு திட்டம் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், மழைக் காலங்களில் வரும் நீரை சேமிக்கவும் ஏதுவாக ஏரி, குளங்கள் பராமரிப்பு திட்டம் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்படும்.

கடலுக்கு செல்லும் நீரை தடுக்க, மழைநீரை சேமிக்க, தேவையான இடங்களில் தடுப்பணைகள் கட்டப்படும். இவ்வாறு ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது

## "இசேவை மையம் தினசரி செயல்பட வேண்டும்!" மாவட்ட நிர்வாகத்திற்குப் பொன்.சண்முகநாதன் மார்த்தாண்டன் வேண்டுகோள்!



திசையன்விளை, ஜூன்.20-
திசையன்விளை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) முகாமில், குட்டம் நுகர்வோர் பாதுகாப்பு கழகத்தின் சார்பில் பொதுமக்களின் பல்வேறு அத்தியாவசியத் தேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் குறித்த முக்கியக் கோரிக்கை மனுக்கள் ஜமாபந்தி அலுவலரிடம் நேரில் வழங்கப்பட்டன.*சுனாமி பாதுகாப்பு மையம் மற்றும் கிராமச்சாவடி சீரமைப்பு:*

குட்டம் கஸ்பா பகுதியில் கிராமச்சாவடி கட்டிடம் கட்டுவதற்கு வருவாய்த்துறை மூலம் உரிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், குட்டம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள வருவாய் - பேரிடர் மேலாண்மை துறைக்குச் சொந்தமான 'சுனாமி பேரிடர் பாதுகாப்பு மையம்' கட்டிடத்தைப் போர்க்கால அடிப்படையில் பழுதுநீக்கிச் சீரமைக்க வேண்டும் என்றும் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

*புதிய சார்நிலை கருவூலம் - இசேவை மையம்:*

நீண்ட நாள் தேவையான உள்ள 'சார்நிலை கருவூலம்' ஒன்றை திசையன்விளையில் உடனடியாக அமைக்க வேண்டும். மேலும், திசையன்விளை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள இசேவை மையத்தைப் பொதுமக்கள் தினசரி பயன்படுத்தும் வகையில் எவ்வித தொய்வுமின்றி செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

*மயான இடம் மற்றும் சாலை ஆக்கிரமிப்பு அகற்றம்:*

குட்டம் ஊராட்சிக்குட்பட்ட பற்பநாதபுரம் ஆதிதிராவிடர் சமூக மக்களுக்குத் தனியாக மயான இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். தஞ்சபுரம் முதல் தோப்புவிளை செல்லும் 'மங்கம்மா சாலையில்' போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

* மனுநீதிநாள் கோரிக்கையும்... மனு அளிப்பும்:*

மாநில அளவில் நியாய விலை கடை விற்பனையாளர்களின் மாதாந்திரக் கூட்டத்தினை மாதத்தின் முதல் பணி நாளுக்கு மாற்றிட வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் குட்டம் கஸ்பா பகுதியில் சிறப்பு 'மனுநீதிநாள்' முகாம் நடத்தி மக்கள் குறைகளைக் தீர்க்க வேண்டும் என்றும் இக்கோரிக்கை மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்கோரிக்கைகள் அடங்கிய மனுவினை குட்டம் நுகர்வோர் பாதுகாப்பு கழக நிறுவனர் பொன்.சண்முகநாதன் மார்த்தாண்டன் மற்றும் அதன் செயலாளர் ஆனந்த் பிரசாத் மார்த்தாண்டன் ஆகியோர் ஜமாபந்தி அலுவலரிடம் நேரில் வழங்கினர்.

## "மகளிர் உரிமைத்தொகை, பட்டா மாறுதலுக்கு உத்தரவு!" தென்காசி ஜமாபந்தியில் 3வது நாளாகக் கலெக்டர் ரஞ்ஜீத்சிங் அதிரடி!



தென்காசி, ஜூன்.20-
தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் 1435 (20252026) ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற்று வருகிறது. (17.06.2026) அன்று கடையம் குறுவட்டத்தின் கீழ் உள்ள கிராமப் பகுதிகளிலும், (18.06.2026) அன்று ஆழ்வார்குறிச்சி குறுவட்டத்திற்குட்பட்ட கிராமப் பகுதிகளிலும், இன்றைய தினம் (19.06.2026) கல்லூரணி குறுவட்டத்தின் கீழ் உள்ள சுந்தரபாண்டியபுரம், திருச்சிற்றம்பலம், மேலப்பாவூர், பாட்டாக்குறிச்சி, குணராமநல்லூர், குலசேகரப்பட்டி, கல்லூரணி, திப்பணம்பட்டி, ஆவுடையானூர் ஆகிய கிராமப் பகுதிகளுக்கு வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மேற்கொள்ளப்பட்டது. இக்கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, வாரிசு சான்று, மகளிர் உரிமைத்தொகை போன்ற பல்வேறு கோரிக்கை சார்ந்த 52 மனுக்களை வழங்கினார்கள். இக்கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும், 23.06.2026 அன்று நிறைவாக தென்காசி குறுவட்டத்தின் கீழ் உள்ள கிராமப்பகுதிகளில் 1435 (20252026) ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., தெரிவித்தார்.இந்நிகழ்வில், உதவி ஆணையர் (நில அளவை) ஜாஹீர் உசைன், தென்காசி வட்டாட்சியர் ஹரிஹரன், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் இராம்குமார் (பொது), தென்காசி தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) அரவிந்த், வட்டாட்சியர்கள் ஓசன்னா பெர்னாண்டோ (நகர நிலவரித்திட்டம்), பட்டமுத்து (நகர நிலவரித் திட்டம்), திரு.கண்ணன் (சமூக பாதுகாப்பு திட்டம்), சரவணன் (கோட்ட கலால்), அருணாசலம் (ஆதி திராவிடர் நலம்) மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வீட்டு வாசலுக்கே தேடிவந்த வங்கிச் சேவை!" தென்மண்டல அளவில் விருதுகளை அள்ளிக்குவித்த கோவில்பட்டி அஞ்சல் கோட்டம்!



கோவில்பட்டி, ஜூன்.20-
இந்தியா போஸ்ட் பேமண்ட்ஸ் வங்கி (மிறிறிங்ி) சேவைகளைத் துரிதமாகவும், மக்கள் போற்றும் வகையிலும் வழங்கி, சென்ற நிதியாண்டில் தென்மண்டல அளவில் மிகச் சிறந்த சாதனைகளைப் படைத்த கோவில்பட்டி அஞ்சல் கோட்டத்திற்குப் பல்வேறு உயரிய விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.*இந்தியா போஸ்ட் பேமண்ட்ஸ் வங்கியின் பன்முகச் சேவைகள்:*
மத்திய அரசின் இந்தியா போஸ்ட் பேமண்ட்ஸ் வங்கியானது சாமானிய மக்களுக்காகப் பல்வேறு அத்தியாவசியச் சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. வங்கிகளுக்கு நேரில் செல்லாமல் எவ்வித கட்டணமுமின்றி அஞ்சலகத்தின் மூலமாகவே பணம் எடுத்துக்கொள்ளும் 'ஏ.இ.பி.எஸ்' (கிணிறிஷி) சேவை, அரசின் நலத்திட்ட மானியங்களை நேரடியாக வரவு வைத்தல், பள்ளி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை வரவு வைத்தல் மற்றும் மொபைல் பேங்கிங் மூலம் பிற வங்கிகளுக்குப் பணப் பரிமாற்றம் செய்தல் போன்ற எண்ணற்ற டிஜிட்டல் சேவைகளை அஞ்சலகங்கள் வழங்கி வருகின்றன.*தெற்கு மண்டல அளவிலான பிரம்மாண்ட விருது விழா:*
இச்சேவைகளில் சென்ற நிதியாண்டில் மிகச் சிறப்பாகச் செயல்பட்ட அஞ்சலக அலுவலர்களைக் கௌரவிக்கும் பொருட்டு, தெற்கு மண்டல அளவிலான விருது வழங்கும் விழா கடந்த 18.06.2026 அன்று மதுரையில் வைத்து பிரம்மாண்டமாக நடைபெற்றது. இதில், ஒட்டுமொத்தச் சேவையில் மிக அதிக வருவாய் ஈட்டுதல், சாதாரண ஐபிபிபி கணக்குகளைப் 'பிரிமியம்' கணக்குகளாக உயர்த்துதல் மற்றும் ஏ.இ.பி.எஸ் போன்ற அதிநவீனச் சேவைகளை மக்களிடம் கொண்டு சேர்த்ததற்காகக் கோவில்பட்டி அஞ்சல் கோட்டத்திற்குத் தகுதியான உயரிய விருதுகள் வழங்கப் பட்டன.*விருதுகளைப் பெற்றுக் கொண்ட சாதனையாளர்கள்:*
ஒட்டுமொத்தச் சேவைக்கான முதன்மை விருதினை கோவில்பட்டி கோட்ட அஞ்சலக கண்காணிப்பாளர் செ. சுரேஷ் குமார் அவர்களும், பிற வங்கியிலுள்ள பணத்தை வாடிக்கையாளர்களின் வீட்டு வாசலுக்கே கொண்டு சேர்த்த அசாத்திய சேவைக்காகக் குருவார்பட்டி கிளை அஞ்சலக அலுவலர் தனலட்சுமி அவர்களும் மேடையில் பெருமிதத்துடன் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் இந்தியா போஸ்ட் பேமண்ட்ஸ் வங்கி கோவில்பட்டி கிளை மேலாளர் ஜெயக்குமார் மற்றும் ஏனைய உபகோட்ட கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விருதுகளைப் பெறக் காரணமாய் இருந்து, தங்களின் அர்ப்பணிப்பான உழைப்பை வழங்கிய அனைத்து அஞ்சலக அலுவலர்களுக்கும், தொடர்ந்து ஆதரவளித்து வரும் வாடிக்கையாளர்களுக்கும் கோட்ட கண்காணிப்பாளர் செ. சுரேஷ் குமார் தனது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.




## "பாமகவின் 46 ஆண்டுகாலப் போராட்டத்திற்குப் பெருவெற்றி!" சாதிவாரி கணக்கெடுப்பு அறிவிப்பால் பாமக கொண்டாட்டம்!

சேலம், ஜூன்.20-
தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினை வெளியிட்ட மாண்புமிகு தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து, சேலம் கோரிமேடு பகுதியில் பாட்டாளி மக்கள் கட்சியினர் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி மிக பிரம்மாண்டமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். தமிழகத்தில் சமூக நீதியை நிலைநாட்டவும், மக்கள் தொகைக்கு ஏற்ப இடஒதுக்கீட்டை உறுதி செய்யவும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பது பாட்டாளி மக்கள் கட்சியின் 46 ஆண்டுகால முதன்மையான கோரிக்கையாகும். இந்த நீண்ட கால சமூக நீதிப் போராட்டத்தை தற்போதைய காலகட்டத்திலும் கறாராகக் கையில் எடுத்து, அரசிடம் இருந்து உரிய அறிவிப்பைப் பெற முக்கிய பங்காற்றிய பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும், சாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பினை வெளியிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த எழுச்சிமிகு கொண்டாட்டத்திற்குப் பாமகவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.*திரண்ட பாமக நிர்வாகிகள் பட்டாளம்:*
சேலம் கோரிமேடு பகுதியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பாமக மாநில துணைத்தலைவர் கார்த்தி ணிஜ். விலிகி., மாநகர மாவட்ட செயலாளர் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். மேலும், மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோவிந்தராஜ், வைரம், பூமாலை, ஒன்றிய குழு தலைவர் வெங்கட், மாவட்ட துணைச் செயலாளர் அருள், மாவட்ட பொறுப்பாளர் பாஸ்கர், பகுதி செயலாளர் அன்சி, திரிசங்கு, தனசேகர், உள்ளிட்ட பாமகவின் முக்கியப் பொறுப்பாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்துகொண்டு தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.



## "பள்ளி, வழிபாட்டுத் தலங்களுக்கு அருகே 3 மதுக்கடைகளா?" சேலம் தாரமங்கலம் நெடுஞ்சாலையில் பெண்கள் போராட்டம்!

சேலம், ஜூன்.20-
சேலம் ஜிளி தாரமங்கலம் மாநில நெடுஞ் சாலையொட்டி சட்டத்திற்கு புறம்பாக அமைந்திருக்கும் புதுரோடு பஸ்ஸ்டாப் NO.1 மதுக்கடை எண் 7237, NO.2 மதுக்கடை எண் 7112 மற்றும் அடுத்த ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள பாரக்காடு சித்தனூர் ழிளி.3 மதுக்கடை எண் 7123. இந்த மதுக்கடை முன், வியாழக்கிழமை 18.6.2026 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் விலிறி முருகன் ஆகிய எனது தலைமையில் சுமார் 50 க்கு மேற்ப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்கள், 20 க்கு மேற்பட்ட ஆண்கள் கலந்துகொண்டு மதுக்கடைக்கு எதிராக தமிழக அரசாங்கத்தை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பபட்டது. சூரமங்கலம் காவல் ஆய்வாளர் அவர்கள் மக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் மூன்று மதுக்கடையை அகற்ற நடவடிக்கை எடுப்பதாக பொதுமக்களிடம் கூறியதன் பெயரில் ஆர்ப்பாட்டம் விலகி கொள்ளப்பட்டது. மேலும், அடுத்து வரும் நாள்களில் மதுக்கடையை அகற்றவில்லை என்றால் 300க்கும் மேற்பட்ட பலதரப்பட்ட மக்களை அழைத்து மதுக்கடை பூட்டு போடும் போராட்டம் நடைபெறும் என்பதை இதன் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.
அதன் அருகிலேயே ஐயனாரப்பன் கோவில் மற்றும் காயத்ரி, பழனியப்பா ஆகிய பள்ளிக் குழந்தைகள் அந்த வழியாக செல்வதாலும் இந்த மூன்று மதுக்கடைகளும் மாநில நெடுஞ்சாலையொட்டி சட்டத்திற்கு புறம்பாக அமைந்திருப்பதால். இங்கு மது அருந்திவிட்டு மது போதையில் செய்வதரியாது அரைகுறை ஆடையில் ஆண்கள் விழுந்து கிடப்பதாலும் மற்றும் இரவு நேரத்தில் மது குடித்து விட்டு சாலையில் குறுக்கே விழுவதால் வாகன ஓட்டிகள் அடிக்கடி விபத்து ஏற்பட்டு இறந்து வருகின்றனர். மேலும், மூன்று கடைகளின் அருகே வழிபாட்டு தளங்கள் மற்றும் பள்ளி கூடங்கள் உள்ளதாலும் இந்த மதுக்கடைகளை அகற்ற கடந்த 2024ல் இருந்து பல்வேறுக்கட்ட போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் செய்தும் மாவட்ட ஆட்சியரிடமும், மதுக்கடை மேலாளர் மற்றும் மாவட்ட ஆணையரிடமும் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் நேரிலும் அஞ்சல் வாயிலாகவும் பலமுறை ஆதாரத்துடன் மனுக்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஈரோடு மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அதிகாரி பொறுப்பேற்பு

ஈரோடு, ஜூன்.20-
ஈரோடு மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அதிகாரியாக மகேஸ்வரன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு சக்கர வியூகம் புலனாய்வு தினசரி நாளிதழ் சார்பாக ஈரோடு மாவட்ட செய்தியாளர் டி. ராமலிங்கம் நேரில் சந்தித்து வாழ்த்து கூறினார்.



## வெள்ளை அறிக்கையில் புதிய தகவல்கள் எதுவும் இல்லை அண்ணாமலை விமர்சனம்

சென்னை, ஜூன்.20-
தமிழக அரசு சமீபத்தில் வெளியிட்ட நிதிநிலை குறித்த, தவெக அரசு வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கையை படித்து பார்த்ததாகவும், அதில் பெரிதாக ஆச்சரியப்படும் அளவுக்குப் புதிய தகவல்கள் எதுவுமே இல்லை என்றும் அண்ணாமலை விமர்சித்து உள்ளார்.



இதில் உள்ள பெரும்பாலான தகவல்கள் ஏற்கனவே தெரிந்தவையே என்றும் கூறியுள்ளார். தமிழகத்தில் வேலை செய்யும் வயதுடைய மக்கள் தொகை, வரும் 2031 ஆம் ஆண்டில் இருந்து குறையத் தொடங்கும் சூழலில், மாநிலத்தின் வருவாய் அடித்தளத்தை வலுப்படுத்தவும், நிதிநிலையை சீர்செய்யவும் மிகவும் குறுகிய காலமே உள்ளது மிகவும் கவலைக்கிடமான விஷயமாகும் என்று அண்ணாமலை குறிப்பிட்டு உள்ளார்.எனவே தவெக அரசு இந்த வெள்ளை அறிக்கையைக் காரணம் காட்டி, செயல்படாமல் இருக்கக் கூடாது. இந்த பாதிப்புகளைச் சரிசெய்யத் தேவையான, உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இது தொடர்பாக, பொருளாதார நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்கள் மட்டுமின்றி, தொழில், வர்த்தகம், நிர்வாகம், தொழில்நுட்பம், சமூக மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வல்லுநர்களையும் உள்ளடக்கிய,ஒரு "செயல்திறன் மிக்க" ஆலோசனைக் குழுவை அமைத்து, தமிழகத்தை வலுவான நிதிப் பாதைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அண்ணாமலை கேட்டு கொண்டுள்ளார்




## "முதல்வர் விஜய் பிறந்தநாளுக்கு கபடி திருவிழா!" மாவட்ட மேற்கு செயலாளர் ஜெகன் ராஜ் பங்கேற்பு!

சாத்தான்குளம், ஜூன்.20-
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக வெற்றி கழகத்தின் சாத்தான்குளம் தெற்கு ஒன்றியம் சார்பாக தட்டார்மடத்தில் வைத்து மாபெரும் கபடி போட்டி மிக எழுச்சியாக நடைபெற்றது.
இப்போட்டியினைத் தவெக மாவட்ட மேற்கு செயலாளர் ஜெகன் ராஜ் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தவெக இணை செயலாளர் சிவலிங்கம், சாத்தை மத்திய ஒன்றிய செயலாளர் ஆனந்த், சாத்தை தெற்கு ஒன்றிய செயலாளர் சங்கர், சாத்தை நகர செயலாளர் சிவா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஐயப்பன், மாவட்ட நிர்வாகிகள் ஆ.சக்திவேல், மாரீஸ்வரன் மற்றும் கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் பலர் திரளாகக் கலந்துகொண்டு வீரர்களை ஊக்கப்படுத்தினர்.

## "மோசடி நபர்களுக்கு ஆதரவாக செயல்பட்டவர் சி.மகேந்திரன்" இந்திய கம்யூ. மாநிலச் செயலர் விளக்கம்

சென்னை, ஜூன்.20-
"தவெகவில் இணைந்த இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் சி.மகேந்திரன், மோசடி பேர்வழிகளுக்கு ஆதரவாக செயல்பட்டவர். கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டவர்" என அக்கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.




இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சி.மகேந்திரன் நேற்று தவெகவில் இணைந்தது குறித்து இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், "இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் மூத்த உறுப்பினரான சி.மகேந்திரன் கட்சி அமைப்புகளில் பல்வேறு நிலைகளில் பொறுப்பு வகித்தவர். சமீபகாலமாக கட்சியின் அமைப்பு விதிகளுக்கு விரோதமாகவும், கட்சியின் கோட்பாட்டு நெறிமுறைகளுக்கு எதிராகவும் செயல்பட்டதால் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டார்.
குறிப்பாக, கட்சியின் ஆரம்பகால தலைவர்களால் உருவாக்கப்பட்ட, இன்று தமிழகத்தில் மிகச் சிறந்த மதிப்புமிக்க பதிப்பகமாக வளர்ந்துள்ள நிறுவனத்தை குறுக்கு வழியில் சிலர் கையகப்படுத்துவதற்கு மோசடியான ஆவணங்களைத் தயார் செய்திருந்திருந்தனர். அத்தகைய மோசடி பேர்வழிகளுக்கு ஆதரவாக சி.மகேந்திரன் செயல்பட்டார்.எனவே, சி.மகேந்திரன் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. அவரும் கட்சியுடன் எவ்வித தொடர்பும் இல்லாமல் இருந்து வந்தார். அவர், தனது தவறுகளை திருத்திக்கொண்டு கட்சியுடன் தன்னை பொருத்திக்கொள்ள கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்தி கொள்ளாமல் தற்போது, தமிழக வெற்றிக் கழகத்தில் சேர்ந்துவிட்டார். சி.மகேந்திரனின் இந்த நடவடிக்கையின் மூலம் அவர் மீது கட்சி எடுத்த நடவடிக்கை மிகச் சரியானது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்று அவர் கூறியுள்ளார்.

## சேலம் மாவட்டம் எடப்பாடி அருகே நீட் தேர்வுக்கு தயாராகி வந்த மாணவி தற்கொலை!

சேலம், ஜூன்.20-
சேலம் மாவட்டம் எடப்பாடி அருகே நீட் தேர்வுக்கு தயாராகி வந்த மாணவி கோபிகா(19 வயது) தற்கொலை செய்து கொண்டார். ஏற்கனவே நீட் தேர்வுக்கு தயாராகி வந்த கோவையைச் சேர்ந்த அனு கீர்த்தனா என்ற மாணவி தற்கொலை செய்துகொண்ட நிலையில் தற்போது கோபிகாவும் தற்கொலை செய்து கொண்டார். ஜூன் 21ம் தேதி நடைபெறும் நீட் மறுதேர்வுக்கு தயாராகி வந்த நிலையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்






SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000